வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 30.12.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சத்தீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி-60 ராக்கெட் இன்று இரவு 9.58 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று முதல் 3 நாள் அரசு முறைப் பயணமாக கத்தாருக்கு செல்கிறார்.
- அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்டர் நேற்று இரவு ஜார்ஜியாவில் காலமானதை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி அவரது மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில் நாளை இரவு நடைபெற உள்ள புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, காவல் துறை தலைவர் திரு அஜித்குமார் சிங்லா தலைமையில் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது.

<u>இஸ்ரோ-</u>

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சத்தீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ஸ்பேடக்ஸ் மிஷின் எனப்படும் ஸ்பேஸ் டாக்கிங் சோதனையை இஸ்ரோ தொடக்கி உள்ளது. விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி-60 ராக்கெட் இன்று இரவு 9.58 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான 25 மணி நேர கவுன்டவுன் சுமுகமாக நடைபெற்று வருகிறது. சேசர் எனும் SDX 01 மற்றும் டார்கெட் எனும் SDX 02 ஆகிய 2 செயற்கைகோள்கள் புவியில்

இருந்து 476 கிலோமீட்டர் தொலைவில் வெவ்வேறு சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்படுகின்றன. நிலவின் தாதுப் பொருட்கள், இந்திய விண்வெளி மையம் அமைப்பதற்கான முன்னோட்டப் பணிகளை இந்த செயற்கை கோள்கள் ஆய்வு செய்யும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஸ்பேடக்ஸ் ஸ்பேஸ் டாக்கிங் சோதனை வெற்றி அடைந்த பின் மனித விண்வெளி பயணம் மற்றும் செயற்கைகோள் சேவைப் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ளும் நாடாக இந்தியா விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தொழில்நுட்பப் பணி குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சந்திரனுக்கு பயணம் மேற்கொள்ள திட்டமிடுவதற்கும் உதவிகரமாக இருக்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. மேலும் செயற்கை கோளை தரையிறக்கி பூமிக்கு திரும்பவும், பாரதிய ஆந்த்ரிஷ் நிலையத்தை உருவாக்கவும் இது பயன் உள்ளதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. செயற்கை கோள்களுக்கு இடையேயான பிரித்தல், வேகம் மற்றும் வழி நடத்துதல், 2 நிறுத்தப்பட்ட விண்கலங்களுக்கு இடையே மின்சார பரிமாற்றம், கலப்பு விண்கல கட்டுப்பாடு ஆகியவற்றில் துல்லியமாக செயல்படும் தொழில் நுட்பம் கொண்ட தேர்ச்சி பெற்ற 4-ஆவது நாடாக இந்தியா விளங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

***<u>அமித் ஷா</u>***

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று 2 நாள் பயணமாக குஜராத் சென்றுள்ளார். அம்மாநிலத்தின் வல்சாத் மாவட்டத்தில் உள்ள தரம்பூரில் ஸ்ரீமத் ராஜ் சந்திரா மிஷனின், ஆண்டு விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் இன்று மதியம் அவர் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியில் குஜராத் மாநிலத்தின் நிதி மற்றும் எரிசக்தி துறை அமைச்சர் திரு கனுபாய் தேசாய் மற்றும் உள்துறை இணை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

***ஜெய்சங்கர்***

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று முதல் 3 நாள் அரசு முறைப் பயணமாக கத்தார் செல்கிறார். இந்த பயணத்தின் போது அவர் கத்தார் பிரதமர் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஷேக் முகமத் பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல்தானியை சந்தித்து இருநாடுகளுக்கு இடையேயான அரசியல், வர்த்தகம், எரிசக்தி, முதலீடு, கலாச்சாரம் மற்றும் பல்வேறு துறைகள் குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்ய உள்ளனர்.

***நிர்மலா சீதாராமன்***

வரவிருக்கும் 2025-26-ஆம் நிதி ஆண்டிற்கான பட்ஜெட் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இன்று புதுடெல்லியில் தொழில் துறை பிரதிநிதிகளுடன் பட்ஜெட்டிற்கு முந்தைய 5-ஆவது ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை ஏற்ற அவர், முதலீடு மற்றும் பொது சொத்து மேலாண்மை, பொருளாதார விவகாரங்கள், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு துறை சார்ந்த செயலாளர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

***ஜிம்மி கார்டர்***

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்டர் நேற்று இரவு ஜார்ஜியாவில் காலமானார். அவருக்கு வயது 100. 1977 முதல் 1981 ஆம் ஆண்டு வரை அமெரிக்க அதிபராக பணியாற்றிய அவருக்கு 2002-ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவரது மறைவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். தொலைநோக்கு பார்வை கொண்ட ஜிம்மி கார்டர், உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக அயராது உழைத்தவர் என்று பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்திய-அமெரிக்க உறவுகளை

வளர்ப்பதில் அவரது பெரும் பங்களிப்பு என்றென்றும் நினைவு கூரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

<u>*புதுச்சேரி-புத்தாண்டு*</u>

புதுச்சேரியில் நாளை இரவு கடற்கரை சாலையில் நடைபெற உள்ள புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர். இதனை ஒட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பணியில் ஈடுபடும் காவலர்களின் செயல்பாடுகள் குறித்து, காவல் துறை தலைவர் திரு அஜித்குமார் சிங்லா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காவலர்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இதுகுறித்து காவல்துறை துணைத் தலைவர் திரு சத்திய சுந்தரம் கூறுகையில் .........

இன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர்கள் திரு நாரா சைதன்யா, திரு பிரவீன்குமார் திரிபாதி, திரு கலைவாணன் மற்றும் காவல் கண்காணிப்பாளர்கள் பங்கேற்றனர்.

<u>*புதுச்சேரி-தேர்தல்*</u>

இந்திய தேர்தல் ஆணையம் அண்மையில் வெளியிட்டுள்ள விரிவான புள்ளி விவரங்களின் படி, 2024- மக்களவை தேர்தலில் நாட்டிலேயே அதிக பெண் வாக்காளர்களை புதுச்சேரி பதிவு செய்துள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு ஜவஹர் தெரிவித்துள்ளார். இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு.............

புதுச்சேரியில் 10 லட்சத்து 23 ஆயிரத்து 699 வாக்காளர்களில், 5 லட்சத்து 42 ஆயிரத்து 979 பேர் பெண் வாக்காளர்கள் என்றும், குறிப்பாக மாகே சட்டமன்ற தொகுதியின் அனைத்து 31 வாக்குச் சாவடிகளிலும் பயிற்சி பெற்ற பெண் அதிகாரிகளால் பிரத்யேகமாக பணியாற்றி வரலாறு படைத்துள்ளதாக அவர் செய்தி குறிப்பில் தெராரிவித்ததுள்ளார். மேலும், யூனியன் பிரதேசத்தில் திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளி

வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாகவும் அவர் கூறினார். பதிவு செய்யப்பட்ட 151 திருநங்கை வாக்காளர்களில் சுமார் 70-சதவிகிதம் பேர் வாக்களித்துள்ளனர் என்றும், நோட்டா வாக்குகள் 12 ஆயிரத்து 199-ல் இருந்து 9 ஆயிரத்து 763-ஆக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தேர்தல் ஆர்வலர்கள், ஆகியோர் தேர்தல் குறித்த புரிதலை மேம்படுத்தும் விதமாக தேர்தல் ஆணைய இணையதளத்தில் இடம் பெற்றுள்ள தரவு தொகுப்புகளை ஆராயுமாறு தலைமை தேர்தல் அதிகாரி திரு ஜவஹர் கேட்டுக் கொண்டுள்ளார்.

<u>நினைவலைகள் 2024</u>

2024-ஆம் ஆண்டில் புதுச்சேரியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு நாளை இரவு 8.30 மணிக்கு ஆகாஷ்வாணி-புதுச்சேரியின் முதன்மை மற்றும் பண்பலை அலைவரிசைகளில் ஒலிபரப்பாக உள்ளது.

இதில் புதுச்சேரியின் முக்கிய அரசியல் நிகழ்வுகள், அரசின் நலத்திட்டங்கள், உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பு இடம் பெறுகிறது.

<u>கிரிக்கெட்</u>

இந்தியாவுக்கு எதிரான 4-ஆவது பார்டர்-கவாஸ்கர் டிராபி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 5-ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 184 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலிய அணி 2-க்கு ஒன்று என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. கடைசி டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் சிட்னியில் தொடங்குகிறது.

**<u>கால்பந்து</u>**

சந்தோஷ் டிராபி கால்பந்து போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் மேற்கு வங்க அணி 4-க்கு 2 என்ற கோல் கணக்கில் சாம்பியன் சர்வீஸஸ் அணியை வென்று 47ஆவது முறையாக இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளது. மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் கேரள அணி, மணிப்பூர் அணியை 5-க்கு 1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதி ஆட்டத்திற்கு தகுதிப் பெற்றுள்ளது. ஐதராபாத்தில் நாளை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் மேற்குவங்கம்-கேரளா அணிகள் களம் காண்கின்றன.

**<u>ஹாக்கி</u>**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் ரூர்கேலாவில் உள்ள பிர்சா முண்டா ஹாக்கி மைதானத்தில் இன்று இரவு 8.15 மணிக்கு வேதாந்த கலிங்கா லான்சர்ஸ் அணியை, உத்தரபிரதேச அணியை எதிர் கொள்கிறது.